

தக்ஷிணாமூர்த்தி வெண்பா

அறியாமை நீங்க அருளைப் பொழிந்தே
குறிப்பறிந்து எங்கள் குருவாய் அமர்ந்திட
ஞானத்தின் தந்தையே ஞாலத்தைக் காத்திட
மோனமான மூலப் பொருள்

ஆலத்தின் கீழே அறியாமை மீதேறி
கோலமாய்க் கையில் குறையில்லாச் சின்னமே
மூலமாய் முத்திரை மும்மலம் நீக்கிட
சீலமான அன்பே சிவம்

தென்திசை நோக்கி தெளிவைப் பொழியவே
துன்பம் துடைக்கும் திருமறை ஞானமே
இன்பம் இனிதாய் இசைக்கும் ஒலியிலே
அன்பாய் வழியும் அருள்

நானென்ற பேயும் நலிந்து அகலவே
ஏனென்ற கேள்வி எழுந்திரா உள்ளமே
சேயிங்கு சிந்திக்க சித்தம் தெளியுமே
கோயிலுள் நீகுடி கொள்

உருத்திராமா லையே உரைக்குமே உண்மை
சுருண்ட சிறுநாகம் சுற்றிய சக்தி
மருந்தாய் பிணியகற்ற மாணிக்க வீணை
இருளை விலக்க இனிது

முனிவரும் மக்களும் முன்னின்று கற்க
இனிவரும் தொல்லை இலதென ஓட
தனித்து ஒருவர்செய் தன்னுள் பயனும்